# மரித்தோர் எங்கிருக்கிறார்கள் ?

P V. Jesudas

கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !

மரித்தோர் எங்கிருக்கிறார்கள் என்ற கேள்வி ஒவ்வொரு மனிதனுக்கும் நிச்சயமாக தோன்றும். தங்களுக்கு அன்பானவர்களை இழக்க நேரிட்டு துயரப்படும்போது, அந்த மரித்தோரின் நிலமை என்ன ? என்று நாம் சிந்திப்பதுண்டு. இந்த கேள்விக்கு எல்லா மார்க்கமே பலவிதமான பதில்களை கொடுக்கின்றன.

**மரணத்தினால் துன்பம் துயரம் !**

யாராகிலும் இறந்தால், ஆண்டவன் எடுத்துக் கொண்டான் என்று தேவனை அறிந்த பிள்ளகளும் அறியாத பிள்ளைகளும் சொல்லுகிறார்கள்.

**மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**
–எசேக்கியேல் 18: 32.

இந்த உலகத்தில் எந்த மனிதனும் தானாகவே மரிக்கிறதை (தற்கொலை) ஆண்டவர் விரும்புவதில்லை. வேதம் இதைக் குறித்து திட்டவட்டமாக சொல்லுகிறது. மரணத்தைக் கண்டு ஆண்டவரே லாசருவுக்காக துக்கப்பட்டுக் கண்ணீர் சிந்தினார் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

**அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள்; இயேசு கண்ணீர் விட்டார். அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல்வைக்கப்பட்டிருந்தது.** -யோவான் 11: 33, 34, 35, 38.



எதற்காக அவர் கண்ணீர் விட்டார்? மறு நிமிடமே லாசரு உயிரோடே எழும்பபோகிறான் என்று அவருக்கு நன்றாக தெரியும் பின்பு ஏன் அவர் அழவேண்டும்? இந்த உலகத்தின் தோற்றம் முதல், இன்று வரைக்கும் அந்த மரணம் மக்களுடைய இருதயத்தை துளைத்து துன்பத்தையும் துயரத்தையும் கொடுக்கிறதை அறிந்தவராக கண்ணீர் விட்டார்.

**மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**
-1 கொரிந்தியர் 15: 21, 22

மரணம் என்பது இறைவனிடத்திலிருந்து வந்ததல்ல, மனுஷனிடத்திலிருந்து வந்தது என்று வேதம் சொல்லுகிறது. மனிதனாலே மரணம் வந்தது, ஆனால் இயேசு கிறிஸ்துவினாலே ஜீவன் வந்தது. மனிதன் பாவம் செய்ததினாலே அவன் மரிக்கவேண்டிய அவசியம் உண்டானது. ஆனாலும் அந்த மரணத்திலிருந்து தேவன் ஜீவனை கொடுக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

**பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.** -1 கொரி. 15: 26.

அப்படியானால் மனிதர்களுக்கு முன்பாக இருக்கிற கடைசி சத்துரு மரணம் என்று வேதம் சொல்லுகிறது.

**மனிதன் எப்படி மரணத்தை கொண்டு வந்தான் ?**

**நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாத படியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியில் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.**
- யோவான் 8: 44.

உலகத்தில் மரணத்தை கொண்டுவந்தவன் பிசாசு. ஆண்டவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாமல் இருக்கும்படி ஆதாமை அந்த பிசாசு ஏவினது. ஆண்டவர் திட்டவட்டமாய் இந்த கனியை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று சொல்லிய வார்த்தைகளை கேளாமல் மனிதன் அந்த பிசாசுனுடைய சத்தத்தை கேட்டுப் பாவம் செய்தான்.

ஆண்டவருடைய கட்டளையை மீறினதாலே மரணம் வந்தது.

**ஆதலால்,பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய வரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத் தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். -எபிரேயர் 2: 14, 15.**

மரணத்திற்கு அதிபதி பிசாசு என்று வேதம் சொல்லுகிறது. நாமோ, மரணத்தைக் கொண்டு வருகிறவர் ஆண்டவர் என்று சொல்லுகிறோம். இந்த உலகத்தில் நம்முடைய பாடுகளையும் மரணத்தையும் அவர் ஏற்றுக்கொண்டு நமக்கு நித்திய ஜீவனை கொடுக்க வழிதிறந்தார்.

**தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனா யிருக்கிறார் என்றார். -மத்தேயு 22: 32.**

பாவம் கடவுளாலே உண்டாகவில்லை, மரணம் கடவுளாலே உண்டாகவில்லை. பாவத்திற்கும் மரணத்திற்கும் காரணம் மனுஷனாயிருக்கிறான்.

## மரணத்தை காணாதவர்கள் !

**விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். -எபிரேயர் 11: 5.**

இங்கு ஏனோக்கு மரணத்தை காணாமல் எடுத்துக்கொள்ளப் பட்டார். இந்த கடைசிக்காலத்திலே இயேசு கிறிஸ்து வரும்போது ஏனோக்கை போலதான் நாமும் மரணத்தை ருசி பார்க்காமலேயே எடுத்துக் கொள்ளப்படபோகிறோம்.

**அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினிரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். -2 இராஜாக்கள் 2: 11.**

இங்கு எலியா மரிக்காமல் பரலோகத்திற்கு போனான். அதுதான் ஆண்டவர் நமக்கு வைத்திருக்கும் ஒரு விசேஷமான ஈவு. நாம் மரிக்காமல் கடைசிக்காலத்திலே பரலோகத்திற்கு செல்லபோகிறோம். ஆகவே ஏனோக்கும் எலியாவும் மரணத்தை காணாமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.



அவர்களே சாட்சியாக நமக்கிருக்கிறார்கள்.

## மரணத்தை குறித்து புற மதங்கள் ?

சிலர் நாம் மரித்தவுடனே பரலோகத்திற்கு அல்லது நரகத்திற்கு போய்விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். சிலர் நாம் மரித்தவுடனே பரதிசிக்குப் போய்விடுகிறோம் என்றும் சொல்லுகிறார்கள். நமது இந்து சகோதரர்கள் நாம் மரித்தவுடனே ஏதோ ஒரு லோகத்திற்கு போய் நாம் செய்த பாவங்களை அங்கே தீர்த்துக்கொள்ளபோகிறோம் என்று சொல்லுகிறார்கள். புத்த சகோதரர்கள் நாம் மரித்தவுடனே வேறு ஜென்மங்கள் எடுத்துக் கொண்டே போய், தாங்கள் செய்த கர்மவினைக்கு பலனை அடைந்து தீர்ந்தபிறகு தேவனோடு கூட நேர்ந்துகொள்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

வேறு சிலர் செத்துபோன ஆவிகள் அண்டசராசரங்களில் அலைந்து திரிந்துகொண்டிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். கிரேக்கர்கள் நம்முடைய ஆத்துமா கடவுளிடத்திலிருந்து வந்தது அது பெயர் ஜீவாத்துமா , அது செத்தவுடனையே பரமாத்து மாவாகிய அந்த இறைவனிடத்தில் நேர்ந்துக்கொள்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படி அநேகவிதமான கொள்கைகள் இந்த உலகத்தில் இருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கத்திலேயும் மரணத்தை குறித்து விளக்கமாகவும் சொல்லுகிறது.

## மரணத்தை குறித்து கிறிஸ்தவ மார்க்கம்

கிறிஸ்து மரணத்தை குறித்து சொல்லுவதற்கு தகுதி யுள்ளவராக இருக்கிறார். கிறிஸ்தவ மார்க்கம் மட்டுமே மரணத்தை குறித்து விலாவரியாக சொல்லுகிறது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து மரணத்தை நமக்காக ருசிபார்த்து, அந்த மரணத்தின் பாதாளத்திலே கிடத்தப்பட்டு, அந்த மரணத்தின் பிடியிலே சிக்குண்டு, அந்த பிடியிலிருந்து எழும்பி மரணத்தின் மேல் வெற்றிக்கொண்டு, இன்றைக்கு ஜீவனுள்ளவராக இருக்கின்றார். ஆகவே மரணத்திற்குள்ளாக போன அந்த ஆண்டவர் மரணம் என்பது என்ன என்று அவர்தான் சொல்ல முடியும். மற்ற எவரும் சொல்லமுடியாது.

**என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக் கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.** -எபிரேயர் 2:9.

ஆகவே இங்கு கிறிஸ்து மரணத்தை உத்தரித்தார்.

**நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.**
-வெளி. 1:17.

ஆண்டவரிடத்தில் மரணத்திற்குரிய திறவுகோள் இருக்கிறது. எல்லோரது கல்லறைகளும் மூடப்பட்டு இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் கல்லறை மட்டும் திறந்து கிடக்கிறது. அது கண்காட்சிக்கும் வைக்கப்பட்டிருக்கிறது.

**அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,** -எபிரேயர் 9:27.

மனிதன் ஒரு தரம் பிறக்கிறான் ஒரு தரம் மரிக்கிறான் பின்பு அவன் நியாயத்தீர்ப்பிலே நிற்கிறான் என்று வேதம் சொல்லுகிறது.

**மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கிவிடுகிறவன் யார்? (சேலா.)** -சங். 89:48

## மனிதர்களாகிய நாம் உண்டாக்கப்பட்டது எப்படி?

இங்கு ஆண்டவர் மண்ணை எடுத்து ஒரு மனிதனாக உருவாக்கி அந்த நாசியிலே ஊதினவுடனே அவன் ஜீவாத்துமாவானான் என்று வேதம் சொல்லுகிறது. இங்கு ஆவி தேவனிடத்திற்கு போய்விடுகிறது. நமது சரீரமானது மண்ணிற்கே போய்விடுகிறது. ஆத்துமா என்ற ஒரு தனியான பெருளை ஒரு மனிதனுக்குள் ஆண்டவர் வைக்கவில்லை. மனிதனை உருவாக்கி அந்த நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதினவுடனேதான் அவன் ஜீவாத்துமாவானான். அப்படியாக அந்த மனிதன் ஒரு ஆத்துமா என்று வேதம் சொல்லுகிறது.

தேவ சுவாசமும் சரீரமும் சேர்ந்ததுதான் ஒரு ஆத்துமாவாக இருக்கிறது. ஒரு மனிதன் மரிக்கும்போது உடல் மண்ணுக்கு போய்விடுகிறது. ஜீவன் அதை தந்தவரிடத்தில் போய்விடுகிறது.



**தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும் ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.** –ஆதி. 2:19.

இங்கு பறவைகளையும் ஆண்டவர் மண்ணினாலே உறுவாக் கினார் என்று வேதம் சொல்லுகிறது.

**அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு மிருகங்களும் காட்டு மிருகங்களும் பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன. வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாச முள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின.** -ஆதி 7:21, 22.

ஆண்டவர் எப்படி மனிதனுக்கு ஜீவசுவாசத்தை கொடுத் தாரோ அவ்வண்ணமாகவே மிருகங்களுக்கும் கொடுத்திருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

**சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க் குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்க்கிறார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப்போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் அறியும் படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலைமையைக்குறித்து என் உள்ளத்திலெ எண்ணினேன். மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவை களுக்கும் ஏகசம்பவமுண்டு; இவைகள் சாகிறதுபோலவே இவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மாயையே.**
-பிரசங்கி 3:17, 18, 19.

எல்லா ஜீவன்களுக்கும் சுவாசம் ஒன்றே. ஆகவே மனிதனை போலவே உலகத்திலுள்ளவைகளெல்லாமே மரணத்தின்போது சரீரம் மண்ணிற்கு ஜீவன் தேவனிடத்திற்கு போகிறது.

## ஆத்துமா சாகுமா ?

**இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்.** -எசேக்கியேல் 18:4.

நாம் சொல்லுவதோ ஆத்துமா சாகாது என்று சொல்லுகிறோம்.

**பாவஞ்செய்கிற ஆத்துமாவேசாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் ராஜாவினுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும்,**

துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும். எசேக்கியேல் 18.20

**பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப்பணிந்துகொள்வார்கள்; புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள். ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக்காக்கக் கூடாதே.** சங். 22: 29.

**ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.**

-மத்தேயு 10: 28.

ஆத்துமா அழியும் என்று ஆண்டவர் வெகுத் திட்ட வட்டமாக சொல்லுகிறார்.

**துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பும்படி நீ அவனை எச்சரித்தும் அவன் தன் வழியைவிட்டுத் திரும்பாமற்போனால், அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்.** எசேக்கியேல் 33: 9.

**ஸ்திரீயுடனே விபசாரம்பண்ணுகிறவன் மதிகெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவக் கெடுத்துப்போடுகிறான்.** நீதி. 6: 32.

ஆண்டவர் ஏதேன் தோட்டத்திலேயே சொல்லிவிட்டார், நீ அந்த பழத்தை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் . நாம் ஜீவனை காத்துக்கொள்ள அந்த கனியை புசியாமலிருந்தோமா? புசித்தோம்! அதனால் இன்று வரை மரணத்தை விழுங்கிக் கொண்டிருக் கிறோம்.

**ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். -ஆதி** 2: 17.

மனிதன் தேவன் கொடுத்தக் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போன படியால், அவனுக்கு அவர் சொன்னதுபோல சாவு வந்தது. அதே போல ஆண்டவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படி யாமலிருந்தால் நாம் எப்படி தேவனுடைய ராஜியத்திற்கு போ வோம்? ஆகவே பாவம் செய்த ஆத்துமா நிச்சயமாக சாகும் என்று வேதம் சொல்லுகிறது.

**நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாமொருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். -1** தீமோ. 1: 17.

ஆண்டவர் ஒருவர்தான் அழிவேயில்லாமலிருக்கிறார்.

**ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். -1** தீமோ 6: 16.

இங்கேயும் ஆண்டவர் ஒருவர்தான் அழிவே இல்லாமலிருக்கிறார்.



ஆண்டவருக்கு கீழ்ப்படிந்து நடக்கிற பிள்ளைகளுக்கு அவரை போல அழியாமையை கொடுக்கிறார்.

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

-ரோமர் 2: 7.

அழிவுள்ளவர்களாகிய நாம் அழியாமையை தேடவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

**நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக்கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். -2** தீமோ. 1: 10.

இந்த அழியாமையின் வரத்தை தமது சுவிசேஷத்தின் மூலமாக நமக்கு கொடுக்கிறார்.

**எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக் கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக் கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.**

-1 கொரி. 15: 52–54.

அவருடைய வருகையிலே ஆண்டவர் நமக்கு அழியா மையை கொடுக்கபோகிறார். நாம் வானவருடைய சாயலை அணிந்துக் கொள்ளபோகிறோம்.

## மரணத்திலே என்ன நடக்கிறது ?

**அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழேசெய்யப்படுகிற தொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை.** -பிரசங்கி 9: 6.

நாம் மரணத்தின்போது துக்கப்படுகிறோம் துயரப்படுகிறோம் அதை மரித்தவர்கள் அறியமாட்டார்கள் என்று வேதம் சொல லுகிறது. ஜீவன் போனபிறகு உடல் மண்ணுக்கு போய் விடுகிறது. ஆகவே அவர்களுக்கு இந்த உலகத்தில் எந்த பங்குமில்லாமல் போய்விடுகிறது.

**மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். -சங்.** 115: 17.

மரித்தவர்கள் மவுனமாயிருக்கிறார்கள்.

**அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.** சங். 146: 4.

மரித்தவர்களின் யோசனைகள் அழிந்துபோகிறது.

**ஒரு மரத்தைக்குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்; அதின் வேர் தரையிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும், தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும். மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரர் ஜீவித்துப் போனபின் அவன் எங்கே? தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறதுபோல, மனுஷன் படுத்துக்கிடக்கிறான் ; வானங்கள் ஒழிந்து போகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை.** -யோபு 14: 7-12.

இங்கு மரித்தவர்கள் கல்லறையிலே படுத்துகிடக்கிறார்கள். மரணத்திலே மனிதனுக்கு ஒன்றும் தெரிவதில்லை.

**இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக் கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.** -யோவான் 5: 28, 29.

ஆகவே மரித்தவர்கள் பிரேதகுழியிலே இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. வானங்கள் ஒழிந்து போகுமட்டும் மனிதன் படுத்துக்கிடக்கிறான்.

**இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான். நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச்சொன்னார்; அவர்களோ நித்திரை செய்து இளைப்பாறுகிறதைக் குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள்.** யோவான் 11. 11, 12, 13

மரித்தவர்கள் நித்திரையடைந்திருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

**என் தேவனாகிய கர்த்தாவே நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவி கொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்.** -சங். 13: 3.

இங்கு மரணம் என்பது மரணநித்திரை என்று சொல்லப் படுகிறது. இவ்வளவாய் மரணத்தை குறித்து ஆண்டவர் மிக விளக்கமாக சொல்லும்போது, நாமோ ஆண்டவன் என் பிள்ளையை எடுத்துக்கொண்டான் என்று சொல்லுகிறோம். ஆண்டவர் மிக சீக்கரத்தில் இந்த உலகத்திற்கு வரபோகிறார்.



அவர் வரும்போது எல்லோரும் கல்லறையிலிருந்து எழும்பு வார்கள். மரித்த பரிசுத்தவான்கள் எழும்பி அவரோடேக்கூட போவார்கள். பாவிகளோ தண்டனையோடுக்கூட நித்திய அழிவுக்காக எழுப்பப்படுவார்கள். தாவீது எப்படி எழுந்திருப்பேன் என்று கூறுகிறார்?

**நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலில் திருப்தியாவேன்.** -சங்கீதம் 17: 15.

அவ்வண்ணமாகவே நாமும் எழுந்திருக்கவேண்டும். இன்று அநேக கிறிஸ்தவர்கள் மேற்கே தலையை வைத்து அடக்கம் பண்ணுகிறார்கள்.

**மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.** -மத்தேயு 24: 27.

அப்படியானால் இயேசுவானவர் கிழக்கிலிருந்து வருவார். சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வருவார். ஆகவே மரித்த வர்களை மேற்கே தலை வைத்து அடக்கம் பண்ணினால் ஆண்டவர் கிழக்கிலிருந்து வரும் போது அவர் வருகையை நாம் நேராக எழும்பும்போது பார்க்கமுடியும்.

ஆகவே இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் தன்னை ஒப்புக்கொடுத்தார். நம்மை பார்த்து அவர் மிகுந்த சந்தோஷப்பட இன்றே நாம் பிரயாசப்படுவோம். அவருடைய கட்டளைகளுக்கு பயந்து சரியாக கடைப்பிடிப்போமானால் நாம் யாவருமே மிக ஆரவாரத்தோடு அவரோடேக்கூட பரலோகத்திற்கு செல்வோம், இது நிச்சயமாகவே நடக்கும், இது தவறாது. அந்த பாக்கியத்தை பெற நாம் முழு ஆவலோடும் முழு உண்மையோடும் தேவனுடைய வசனத்தின்படி நடப்போமாக. –ஆமென்.

